செ.கு. எண் :- 251 நாள் 10.12.11.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை - 10.12.2011

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், வேதநாராயணபுரம் கிராமம் ஜி.எஸ்.டி சாலையில், 9.12.2011 அன்று சென்னைக்கு வந்து கொண்டிருந்த டிரெய்லர் லாரியின் மீது பின்னால் வந்த அரசு விரைவு பேருந்து மோதியதில் பேருந்து நடத்துனர் ராஜி மற்றும் அப்பேருந்தில் பயணம் செய்த பயணி சுந்தரராஜன் ஆகியோர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த நடத்துனர் திரு ராஜி மற்றும் பயணி திரு சுந்தரராஜன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த துயரச் சம்பவத்தில் பேருந்தில் பயணம் செய்த பயணிகள் திரு. அருண், திரு. ராஜாராம் மற்றும் திரு. சிலம்பரசன் ஆகியோர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகிறார்கள் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும் காஞ்சிபுரம் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த நடத்துனர் திரு ராஜி மற்றும் திரு சுந்தரராஜன் ஆகியோர் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் திரு. அருண், திரு. ராஜாராம் மற்றும் திரு. சிலம்பரசன் ஆகியோருக்கு தலா 25,000/- ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9